# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 17.11.2020</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 2801/B/20</u>**

திரு P. கதிர்வேலு — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
சிறுகாவேரிப்பாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (17.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு P. கதிர்வேலு மற்றும் பொது தகவல் அலுவலர், திரு ராஜேஷ், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், சிறுகாவேரிப்பாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 09.12.2019 தேதியிட்ட மனுவில், காஞ்சிபுரம் ஒன்றியம் கோனேரிக்குப்பம் ஊராட்சியில் 2010 ஜனவரி மாதம் முதல் 2019 டிசம்பர் மாதம் வரை நடந்த கிராம சபை கூட்டம் எத்தனை என்பது குறித்தும், அக்கூட்டங்களில் பெறப்பட்ட மனுக்கள் எத்தனை என்பது குறித்தும், மேலும் இதன் சம்பந்தமாகவே 10 இனங்களில் தகவல்கள் கோரி காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலக பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. தகவல்கள் வழங்கப்படாததால் மனுதாரர், 23.01.2020 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். முழுமையான தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 04.03.2020 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மனுதாரர் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லை என்றும், வழங்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் பொய்யான தகவல்கள் என்றும், பொது அதிகார அமைப்பு அதிகாரிகள் யாரும் அடிப்படை வசதிகள் எதுவும் செய்து தராமல் ஏமாற்றுக்கின்றனர் என்றும், சம்பந்தமில்லாத தகவல்களை வழங்கி விட்டு, முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கின்றனர் என்றும், பொது தகவல் அலுவலர்களின் செயல்கள் அனைத்தும் திசை திருப்பும்

வண்ணத்தில் உள்ளது என்றும், பல்வேறு ஊழல்கள் நடந்ததாகவும், பல இலட்சம் ரூபாய்கள் கைமாறியதாகவும், ஆகையால் பொது மக்களுக்கு தேவையான அனைத்து பணியையும் மற்றும் கோனேரிக்குப்பம் பஞ்சாயத்திற்குட்பட்ட அனைத்து பகுதியையும் ஆய்வு செய்து தர வேண்டும் என்றும், முழுமையான தகவல்கள் வழங்காத பொது தகவல்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விசாரணையின்போது தெரிவித்தார். தொலைபேசியின் வாயிலாக மேற்படி பொதுத் தகவல் அலுவலரை தொடர்பு கொண்டபோது, அதற்கு பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் உடனுக்குடன் தகவல்கள் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது என்று தெரிவித்து, ஆணையத்திற்கு மின்னஞ்சல் மூலம் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலை அனுப்பி வைத்துள்ளார். மேற்சொன்ன வாதங்களை பரிசீலிக்கையில், மனுதாரருக்குரிய தகவல்கள் அவருக்கு முழுமையாக கிடைக்கவில்லை என்பதை நன்கு உணர முடிகிறது. இருப்பினும் மனுதாரர் பிரிவு 6(1)ல் கோரியுள்ள தகவல்களை மனுதாரருக்கு வழங்க வேண்டும் என ஆணையம் கருதி, மேற்படி மனுதாரரின் தகவல் சம்பந்தமான விசாரணையை, காஞ்சிபுரம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் தீர விசாரித்து 10 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஆணையம் உத்திரவிட்டு, இவ்வழக்கின் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுக்கின்றன:-

**1.மனுதாரரின் 09.12.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்கள் தொடர்பாக, காஞ்சிபுரம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், மனுதாரர் கோரியுள்ள தகவல் அடங்கிய ஆவணங்களை தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(3)(b)ன்கீழ் ஆய்வுசெய்து, இவ்வழக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் மனுதாரரையும் விசாரணைக்கு அழைத்து, விசாரணை மேற்கொண்டு, விசாரணை அறிக்கையை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 10 நாட்களுக்குள் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, மனுதாரர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலுடன் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து, காஞ்சிபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் மூலம் இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் மூலம் சமர்ப்பிக்க ஆணையம் உத்தரவிடுகிறது.**

**2.மனுதாரருக்குரிய முறையான தகவலை, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 7 நாட்களுக்குள் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, மனுதாரர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலுடன் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து இவ்வாணை கிடைக்கப் பெற்ற 10 நாட்களுக்குள் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க பொது தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்திரவிடுகிறது.**

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2801/B/20</u>**
**<u>பெறுநர்</u>**

வருவாய் கோட்டாட்சியர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
சிறுகாவேரிப்பாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

திரு P. கதிர்வேலு,
தலைவர்,
108, டாக்டர் அம்பேத்கார் சாலை,
அன்னை இந்திரா நகர்,
கோனேரிகுப்பம் முதல் நிலை ஊராட்சி,
காஞ்சிபுரம் தாலுக்கா 631 502.

Copy to: File
SCPA-19.11.20